


# நூற்றாண்டு கால நம்பிக்கையும், நிலைத்திருக்கும் பாரம்பரியமும்

முர்ரே அன்ட் கோ

சுபாஷிணி கோமேஸ்வரன்



சென்னையில் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில், வழக்கதிற்கு மாறான ஒரு நாடக வடிவம் அரங்கேறுகிறது.

அங்கே திரை இல்லை, எழுதப்பட்ட உரையாடல் இல்லை, மெல்லிய குரலில் சொல்லப்படும் குறிப்பு இல்லை, இசைக்குழுவும் இல்லை. மாறாக, காலத்தைக் கடந்து வந்த பொருட்களைச் சுற்றி பலதரப்பட்ட பார்வையாளர்கள் கூடுகிறார்கள்: கம்பீரமான ரோஜா மரத்தாலான நான்கு தூண் கட்டில், நுணுக்கமாகச் செதுக்கப்பட்ட ஒரு அலமாரி, பிரம்மாண்டமான அடுக்குப் பெட்டி, நேர்த்தியாகப் பின்னப்பட்ட அறைத் தடுப்பு, ஒரு பித்தளை விளக்கு, ஒரு பழைய கடிகாரம், ஒரு ஓவியம் மற்றும் தேய்ந்த பழமையான ஒரு பெட்டி. ஒவ்வொன்றிலும் நேர்த்தியாக எண்ணிடப்பட்ட அட்டை ஒன்று பொருத்தப்பட்டு, தான் விற்பனையாகும் தருணத்திற்காகக் காத்திருக்கிறது.

ஏலதாரர் ஒவ்வொரு பொருளையும் கவனமாகப் பரிசீலித்து ஒரு தொடக்க ஏலத்தொகையுடன் அறிமுகப்படுத்துகிறார். ஏலப்பலகை உயர்கிறது. மற்றொரு ஏலதாரர் எதிர் ஏலம் கேட்கிறார். ஏலத்தொகைகள் சீராக உயர்கின்றன. ஒரு பொருளின் உண்மையான மதிப்பை அதன் உரிமையாளரே முழுமையாக உணர்ந்திருக்காத நிலையில், தயக்கமும், போட்டியும், திடீர் திடீர் சந்தோஷமும் அங்கே நிலவுகின்றன.

பின்னர், சுத்தியலின் தீர்க்கமான ஓசை கேட்கிறது. அந்த பொருள் விற்கப்பட்டது.

மக்களின் பார்வை வெற்றி பெற்றவர் மேல் திரும்புகிறது. சில மெல்லிய புன்னகைகள், சில ஏமாற்றம் கலந்த பெருமூச்சுகள் அங்கு கலந்திருக்கின்றன. சற்று நேரத்திற்கு முன்பு வரை வேறொருவரின் கதையின் ஒரு பகுதியாக இருந்த ஒரு பொருளைத் தமதாக்கிக்கொள்ள, ஏலத்தில் வெற்றி பெற்றவர் முன்வருகிறார்.

சுமார் ஒரு நூற்றாண்டுகளாக, 'முர்ரே அண்ட் கோ' (Murray & Co.) நிறுவனம் சென்னையில் இந்த ஏல நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. 1927-இல் தொடங்கப்பட்ட இந்நிறுவனம், பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதிக்காலங்கள், சுதந்திரப் போராட்டம், விடுதலை, இந்தியப் பிரிவினை, தொழில்மயமாதல், பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் வணிகத்துறையின் டிஜிட்டல் மாற்றம் ஆகிய காலகட்டங்களைக் கடந்து வந்துள்ளது. 2027-இல் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவிருக்கும் இந்நிறுவனம், வணிகம், வரலாறு, கைவினைத்திறன் மற்றும் மனித உணர்வுகள் சங்கமிக்கும் ஒரு தனித்துவமான வணிக அமைப்பாகத் திகழ்கிறது.

இந்நிறுவனத்தின் நவீனக் கட்டத்தின் மையப்புள்ளியாகத் திகழ்பவர் ஹேமந்த் ஸ்ரீவத்சா. 1992-ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றி வரும் இவர், இன்று சுஜன் கங்காதருடன் இணைந்து நிறுவனத்தை வழிநடத்தி வருகிறார். ஹேமந்தின் மகன் துஷ்யந்த் ஸ்ரீவத்சா மூலமாக, அடுத்த தலைமுறையினரும் இந்த வணிகத்தில் அடியெடுத்து வைத்துள்ளனர்.

ஹேமந்தைப் பொறுத்தவரை, ஏலம் விடுதல் என்பது வெறும் விற்பனை முறை மட்டுமல்ல. அது ஒரு அறிவியலும் கலையும் கலந்ததாகும். ஆய்வு செய்தல், வகைப்படுத்துதல், ஆராய்ச்சி, மதிப்பீடு செய்தல், ஆவணப்படுத்துதல் மற்றும் கட்டுக்கோப்பான செயலாக்கம் ஆகியவை அறிவியலில் அடங்கியுள்ளது. ஒரு பொருளைப் புரிந்துகொள்வது, சூழலைப் புரிந்துகொள்வது, ஏலம் கேட்பவர்களின் ஆர்வத்தைத் தக்கவைப்பது, மற்றும் உண்மையான போட்டி மூலம் விற்பனையாளரோ வாங்குபவரோ கணிக்க முடியாத ஒரு விலையை சொல்வது ஆகியவை கலையில் அடங்கியுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, இது நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்த ஒரு தொழில்.

ஏலதாரரின் பொறுப்பு, பொருளை ஆய்வு செய்வது, அதன் மூலத்தைப் புரிந்துகொள்வது, மற்றும் சந்தை அதன் மதிப்பைத் தீர்மானிக்கும் ஒரு வெளிப்படையான செயல்முறையை உருவாக்குவது ஆகும். இறுதியாக ஏலம் முடிந்து, ஏலச்சுத்தி அடிக்கபடும் போது, விற்பனையாளருக்கு நியாயமாகவும் வாங்குபவருக்கு நம்பகத்தன்மையுடனும் இருக்கும் ஒரு 'முழுமையான விற்பனையை' நிறைவேற்றுவதே அதன் நோக்கமாகும்.

முன்னர் இயங்கி வந்த ஒரு பிரிட்டிஷ் ஏல நிறுவனம் தனது செயல்பாடுகளை நிறுத்தியதைத் தொடர்ந்து, 1927-ல் முர்ரே & கோ. நிறுவனத்தின் பயணம் தொடங்கியது. அதன் நிறுவனர் திரு.வேதாந்தம், அசையாச் சொத்துக்கள் மற்றும் மரச்சாமான்கள் விற்பனையை மேற்கொள்வதற்காக இந்தப் புதிய நிறுவனத்தை நிறுவினார். பின்னர், பட்டயக் கணக்காளரான அவரது சகோதரர் திரு.ராஜம் அவருடன் இணைந்தார். சென்னையின் முக்கியமான இடமான உயர் நீதிமன்றத்திற்கு அருகில் அவர்களது அலுவலகம் அமைந்திருந்தது வசதியாக இருந்தது. ஏலங்களில் பெரும்பாலும் சொத்துக்கள், அடமானம் வைக்கப்பட்டவை, திவால்நிலையில் உள்ளவை, சொத்துத் தகராறுகள் மற்றும் நீதிமன்ற மேற்பார்வையிலான பரிவர்த்தனைகள் ஆகியவயை அடங்கி இருந்தன. இது அந்நிறுவனத்தை நகரத்தின் சட்ட மற்றும் வர்த்தகச் சூழலின் மையத்தில் நிலைநிறுத்தியது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய சர்.முர்ரே கௌட்ஸ் ட்ராட்டரின் பெயரைக் கொண்டு, "முர்ரே" என்ற பெயர், காலனித்துவ காலத் தொடர்பைத் தக்க வைத்துக் கொண்டதாக நிறுவனத்தின் வரலாறு சொல்கிறது.

பல தசாப்தங்களாக, இந்நிறுவனம் பல்வேறு முகவரிகளில் இயங்கியது. ஆனால், அதன் மிகவும் பிரபலமான இருப்பிடம் மவுண்ட் ரோட்டில் - இன்றைய அண்ணா சாலையில் - இருந்தது. அங்கு, மிகப் பழமையான மேசோனிக் லாட்ஜுடன் தொடர்புடைய கட்டிடத்திலிருந்து கிட்டத்தட்ட எண்பத்திரண்டு ஆண்டுகள் செயல்பட்டது. இன்று, அதன் ஏலக்கூடம் ஜெமினி டவர்ஸில் இருந்து செயல்பட்டு, சென்னையின் அடையாளச் சின்னங்களில் ஒன்றான ஜெமினி டவர்ஸுடனான தனது நீண்டகாலத் தொடர்பைத் தொடர்கிறது.

ஏலம் தொடங்குவதற்கு முன்பு ஏலப் பொருட்களைப் பார்வையிட வாங்கக்கூடியவர்களை, அதன் அட்டவணைகள் இன்றும் அழைக்கின்றன. மரச்சாமான்கள், சேகரிப்புப் பொருட்கள், மின்சாரப் பொருட்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் ஆகியவை அக்கரையுடன் காட்சிப்படுத்தப்படுகின்றன; இதன் மூலம், ஏலம் கேட்பதற்கு முன்பு ஒவ்வொரு பொருளையும் நேரில் பரிசோதிக்கும் பாரம்பரிய வழக்கம் தொடர்கிறது.

நீண்ட கால பழமையான பொருள் என்பதாலேயே அது இன்றும் நிலைத்திருக்கிறது என்று சொல்லிவிட முடியாது.

பொருளாதாரம், தொழில்நுட்பம் மற்றும் நுகர்வோர் விருப்பங்கள் ஆகியவை பரிணாம வளர்ச்சி அடைந்ததால், காலனித்துவ காலத்தில் நிறுவப்பட்ட பல வணிகங்கள் மறைந்துவிட்டன. முர்ரே நிறுவனம் நுண்கலை மற்றும் பழம்பொருட்களுக்குள் மட்டுமே தன்னை கட்டுப்படுத்திக் கொள்ளாததால், அது நிலைத்து நின்றது. பல தசாப்தங்களாக,

அது மரச்சாமான்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், அடகு வைக்கப்பட்ட நகைகள், அசையாச் சொத்துக்கள், வங்கி ஜப்திகள், திவால்நிலைச் சொத்துக்கள், தொழில்துறை இயந்திரங்கள், உலோகச் சில்லுகள், அரசாங்க ஒப்பந்தங்கள் மற்றும் முழுமையான தொழில்துறை நிறுவனங்கள் போன்றவற்றைக் கையாண்டுள்ளது.

தொழில்துறைகளின் எழுச்சியையும் வீழ்ச்சியையும், பிரபலமான குடும்பங்களின் மாறிவரும் செல்வ நிலைகளையும், தலைமுறைகள் கடந்து கைமாறும் செல்வங்களையும் இந்நிறுவனம் அதன் பயணத்தில் பார்த்துள்ளது. பெரும்பாலும், ஒரு ஏலம் என்பது நிதிப் பின்னடைவு, இடமாற்றம், துக்கம் அல்லது ஒரு சொத்தின் பிரிவினை போன்ற மிகவும் தனிப்பட்ட ஒரு சூழ்நிலையுடன் தொடங்குகிறது. எனவே, அனுபவத்தைப் போலவே விவேகமும் மதிப்புமிக்கது.

ஏல நிறுவனங்கள் என்பவை விற்பனையாளர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் இடையேயான இடைத்தரகர்கள் என்பதைத் தாண்டி, பரிவர்த்தனையின் ஒவ்வொரு கட்டத்தையும் நிர்வகிக்கின்றன - பரிசோதனை, மதிப்பிடுதல், பட்டியலிடுதல், ஏலதாரர் பதிவு, போட்டி ஏலம், பணம் செலுத்துதல் மற்றும் விநியோகம் வரை.

வாங்குபவரின் தயக்கமும், வாங்கிய பிறகு வருந்துவதும் ஏலதாரர்களுக்குப் பரிச்சயமானவையே. வெற்றி பெற்ற ஏலதாரர்கள், அந்தத் தருணத்தின் உற்சாகத்தில் முன்பணம் செலுத்திவிட்டு, ஏலப் பொருளை வாங்குவதற்கு முன்பே காணாமல் போவதை ஹேமந்த் நினைவு கூர்கிறார். ஆயினும், ஒவ்வொரு ஏலத்திற்கும் பின்னால் உள்ள கொள்கைகள் மாறாமல் இருக்கின்றன: நிபுணத்துவம், துல்லியமான பொருள் விளக்கம், வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயமான செயல்முறை என்ற நம்பிக்கை.

ஏலதாரர்கள் முறையான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என்று பிற நாடுகளில் இருப்பதைப் போலல்லாமல், இந்தியாவில் இந்தத் தொழிலுக்கு உரிமம் வழங்கும் முறை இல்லை. எனவே, நற்பெயரே ஒரு ஏலதாரரின் மிகப்பெரிய தகுதியாகிறது. அது பல ஆண்டுகால அனுபவ அறிவு, நேர்மை மற்றும் நிலைத்தன்மையின் மூலம் பெறப்படுகிறது. முர்ரே & கோ நிறுவனத்தைப் பொறுத்தவரை, அந்த நம்பகத்தன்மை தலைமுறைகள் கடந்து பொறுமையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

முர்ரேயின் ஏலக்கூடத்தில் வந்து சேரும் பொருட்களின் பன்முகத்தன்மையே ஒருவேளை அதன் மிகப்பெரிய வெற்றியாக இருக்கலாம்.

1960-களில் திருவிதாங்கூரின் முன்னாள் அரச குடும்பத்திற்குச் சொந்தமான நகைகளை ஏலம் விட்டது, அதன் பெருமைக்குரிய பணிகளில் ஒன்றாகக் கூறப்படுகிறது - இந்தப் பணிக்கு ரகசியம் காத்தல், நுணுக்கமான பட்டியலிடுதல் மற்றும் சிறந்த ஏல செயல்முறை ஆகியவையின் மீது முழுமையான நம்பிக்கை தேவைப்பட்டது.

முர்ரே, மீனவ சமூகங்களுக்குக் குளங்களையும் ஏலம் விட்டுள்ளது; உரிமையை மாற்றுவதற்குப் பதிலாக, பயன்பாட்டு உரிமைகளைத் திறம்பட மாற்றியுள்ளது. சில ஏல நிறுவனங்களே, அரச குடும்பப் பாரம்பரியப் பொருட்கள் முதல் பொதுப் பயன்பாட்டு வசதிகள் வரை அவர்களின் ஏலம் பரவி இருப்பதை உரிமைக் கொள்ள முடியும்.

தொழில்துறை ஏலங்கள் நிறுவனத்தின் மற்றொரு முக்கியப் அம்சமாகும். தொழிற்சாலைகள் தங்கள் செயல்பாடுகளை நிறுத்தும்போது, அவற்றின் கட்டிடங்கள் அமைதியாகலாம், ஆனால் உள்ளே இருக்கும் இயந்திரங்களின் மதிப்பு குறைந்து விடுவதில்லை. உற்பத்தி உபகரணங்கள், ஜெனரேட்டர்கள், டிரான்ஸ்ஃபார்மர்ஸ் மற்றும் சிறப்பு இயந்திரக் கருவிகள் புதிய உரிமையாளர்களைக் வரவைக்கும்; இதனால் உற்பத்தி உபகரணங்கள் நினைவுச்சின்னங்களாக மாறுவதற்குப் பதிலாக மீண்டும் தங்கள் பயணத்தைத் தொடர ஏதுவாகிறது.

இருப்பினும், ஹேமந்தைப் பொறுத்தவரை, மிகச்சிறிய ஏல கதைகளில்தான், அவருக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி கிடைக்கின்றது என்கிறார். சாதாரண எதிர்பார்ப்புகளுடன் ஒரு பழைய அலமாரியை முர்ரேயிடம் கொண்டு வந்த ஒரு விற்பனையாளரை அவர் நினைவு கூர்கிறார். அதை ஏல இல்லத்திற்கு கொண்டு செல்வதற்கான செலவு அதிகமாக இருந்த போது, அந்தச் செலவுகளை விற்பனை மூலம் ஈடுசெய்ய வேண்டும் என்று அதன் உரிமையாளர் நம்பினார். இறுதியாக ஏலம் முடிந்தபோது, அந்த அலமாரி அவர் எதிர்பார்த்ததை விட கிட்டத்தட்ட நூறு மடங்கு அதிக விலைக்குப் போனது. காசோலையைப் பார்த்த அந்த விற்பனையாளர் மிகவும் வியப்படைந்தார்.

அப்போதுதான், இத்தனை நாளும் தனக்குச் சொந்தமான பொருளின் உண்மையான மதிப்பை அவர் உணர்ந்தார்.

ஹேமந்தைப் பொறுத்தவரை, இது போன்ற தருணங்கள்தான் இந்தத் தொழிலை வரையறுக்கின்றன - ஒரு நல்ல விலையைப் பெறுவது மட்டுமல்ல, மக்கள் கிட்டத்தட்ட ஒரு பொருளின் மதிப்பைக் கவனிக்கத் தவறியதை அவர்கள் அறிய உதவுவதும்தான். பழமையின் மதிப்பைப் அறியும் அதே சமயம், புதிய பார்வையாளர்களும் கிடைக்கின்றனர்.

இளைஞர்கள் ஏலங்களை நோக்கி அதிகளவில் ஈர்க்கப்படுவதாக துஷ்யந்த் குறிப்பிடுகிறார். நிலைத்தன்மை, தேவையானவற்றை வாங்குவது மற்றும் கைவினைத்திறன் மீதான மதிப்பு ஆகியவை பழங்கால மரச்சாமான்கள் மற்றும் விண்டேஜ் அலங்காரப் பொருட்கள் மீதான ஆர்வத்தை மீண்டும் உயிர்ப்பித்துள்ளன. ஒன்றைப் போலவே நிறைய தயாரிக்கப்பட்ட பொருட்களால் வீடுகளை நிரப்புவதற்குப் பதிலாக, தனித்துவமும் வரலாற்று மிக்க பொருட்களையே பலர் தேடுகிறார்கள். ஒரு பழங்காலப் பெட்டி, செதுக்கப்பட்ட நாற்காலி, ஒரு விண்டேஜ் கண்ணாடி அல்லது ஒரு பித்தளை விளக்கு ஆகியவை தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட மரச்சாமான்களை விட அரிதானது, தனித்தன்மைக் கொண்டது என்ற பார்வை அவர்களிடையே இருக்கிறது.

பெரும்பாலும், ஏலத்தில் பொருட்களை வாங்குபவர்கள் ஒரு காலத்தில் இந்தப் பொருட்களைச் சொந்தமாக வைத்திருந்தவர்களைப் பற்றி அறிய விரும்புகிறார்கள். அவர்கள் இன்னொரு குடும்பத்தின் கதையின் ஒரு சிறு பகுதியைத் தங்கள் சொந்த வீடுகளுக்குள் வரவேற்கிறார்கள்.

பிரத்யேகமான ஹோட்டல்கள், பாரம்பரிய சொத்துக்கள் மற்றும் உணவகங்களும் இது போன்ற உணர்வையேப் பகிர்ந்து கொள்கின்றன. வடிவமைப்பாளர்கள் பாரம்பரிய பாணிகளில் பொருட்களை மீண்டும் உருவாக்கினாலும், அவர்கள் பெரும்பாலும் முர்ரேயிடம் அசலான பழமையான பொருட்களைத் தேடி வருகிறார்கள் - அதாவது, உற்பத்தி செய்ய முடியாதபடி இருக்கும் பழமையான பொருட்கள்.

முர்ரேயின் வளாகத்தில் நடப்பது என்பது ஒரு வணிக அனுபவம் மட்டுமல்ல, அது ஒரு சிலிர்க்க வைக்கும் அனுபவமும் கூட. மெருகூட்டப்பட்ட மரத்தின் நறுமணம் காற்றில் வீசுகிறது. ஒவ்வொரு பொருளும் இரண்டு வாழ்க்கைகளின் தருணத்தில் நிலைத்திருக்கிறது—ஒன்று அதை பொக்கிஷமாகப் போற்றிய இல்லத்திலும், இன்னொன்று புதிய இடத்தில் அதன் அடுத்த அத்தியாயத்தைத் தொடங்குவதிலும் இருக்கிறது.

முர்ரே & கோ. தனது நூற்றாண்டு விழாவை நெருங்கிக் கொண்டிருக்கிறது; அதன் கதை, ஒரு நூற்றாண்டு கால மாற்றங்களைக் கொண்ட சென்னையுடன் தானும் சேர்ந்து பயணித்த ஒரு நிறுவனத்தின் கதையாகும் - வீடுகள், தொழிற்சாலைகள், வங்கிகள், அரசுத் துறைகள் மற்றும் குடும்பத் தோட்டங்களுக்குள் நுழைந்து, பொருட்கள், தொழில்கள் மற்றும் நினைவுகள் புதிய மதிப்பையும் புதிய உரிமையாளர்களையும் கண்டறிய உதவியது. சில வணிகங்கள் மட்டுமே பல முடிவைப் பார்த்ததாக சொல்லிக் கொள்ள முடியும். சிலர் ஒரு நூற்றாண்டில் பல புதிய தொடக்கங்களை உருவாக்கியதாக கூற முடியும்.



இந்த அசாதாரணமான வரலாற்றுப் பாரம்பரியத்தை நேர்மை, விவேகம் மற்றும் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் முன்னெடுத்துச் செல்வதால், முர்ரே & கோ. சென்னையின் உண்மையான சாம்பியனாக திகழ்கிறது - நகரத்தின் கடந்த காலத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், அதன் கதைகள் வரும் தலைமுறையினருக்குப் புதிய இல்லங்களைத் தொடர்ந்து கண்டறிவதையும் உறுதி செய்கிறது.